இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 02-08-2024

# ஏன் நிலமே? இயற்கையே!

**அகழ்வாரைத் தாங்கும் நிலமே? ஏன் அழிவை ஏற்படுத்தி விட்டாய்?**
**மக்களை வாழ்விக்கும் மண்ணே, ஏன் மரணத்தைப் பரிசாகத் தந்தாய்?**
**இனிய இயற்கையே! உனது முகம் வயநாட்டில் இப்படி ஏன் மாறியது?**
**நித்திரையில் இருந்த அப்பாவி மக்களை நிர்கதியாய் விட்டது ஏன் நிலமே?**

வயநாட்டில் இருந்து வரும் செய்திகள் அனைத்தும் வருத்தமும் சோகமும் துக்கமும் துயரமும் இப்படி அனைத்தும் கலந்த எல்லாமுமாக இருக்கின்றன. முண்டக்கை, சூரல் மலை, மேப்பாடி ஆகிய மூன்று கிராமங்கள் மொத்தமாக நிலச்சரிவில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான வீடுகள் தரைமட்டம் ஆகி விட்டது.

இதுவரை 270 பேரை உயிரற்ற உடல்களாக எடுத்திருக்கிறார்கள். தோண்டத் தோண்ட மனித உடல்கள். பொக்லைன் இயந்திரங்கள் மண்ணை அள்ளுவதைப் போல மனித உடல்களை அள்ளுகிறது. மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களே கலங்கி நிற்கிறார்கள். வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த நிலையில் மரணமடைந்த உடல்களை எடுத்துள்ளார்கள். குழந்தைகளை கட்டிப் பிடித்தபடி மரணித்த உடல்கள் இருக்கின்றன. ஒரு வீட்டில் நாற்காலியில் அமர்ந்தபடி 3 பேரை மண் மூழ்கடித்துள்ளது. அப்படியே நாற்காலியோடு எடுக்கப்பட்டுள்ளார்கள்.

தப்பியோட வழியின்றி மண்ணும் சகதியும் மழையும் மக்களைச் சூழ்ந்துவிட்டது. அதிகாலை நேரம் என்பதால் அனைவரும் வீட்டுக்குள் இருந்துள்ளார்கள். இன்னும் எத்தனை பேர் உள்ளே சிக்கி இருக்கிறார்களோ? இன்னும் எத்தனை பேர் மூச்சு விட்டுள்ளார்களோ? இன்னும் எத்தனை பேர் மூச்சு விட்டபடியே உள்ளேயே உழன்று கொண்டிருக்கிறார்களோ?

அதிகமான வெள்ளத்தை காட்டாற்று வெள்ளம் என்பார்கள். இங்கே காட்டையே வெள்ளம் அடித்துச் சென்றிருக்கிறது. சாலைகள், பாலங்கள், வீடுகள், விடுதிகள், கடைகள், வாகனங்கள் என எதிர்கொண்ட அனைத்தையும் வாரிச் சுருட்டி விட்டுப் போய்விட்டது வெள்ளம். நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களது உடல்கள், 12 கிலோ மீட்டர் தூரத்துக்கு அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்பதை வைத்து இது எத்தகைய கோரத் தாண்டவம் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

முண்டக்கை, சூரல் மலை, மேம்பாடி மக்களது உடல்கள் 12 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள வெள்ளர்மலை, அட்டமலை, நிலம்பூர், சாலியாறு வரை போய்க் கிடக்கின்றன. குறுக்கே சில ஆறுகள் இருப்பதால் அந்த ஆற்றோடு போன உடல்களும் உண்டு. சிறு நீர்வீழ்ச்சிகள் இருந்ததால், அந்த நீர்வீழ்ச்சியில் விழுந்து பாறையில் சிக்கிய உடல்களும் உண்டு. கை,கால், தலை இல்லாத உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இதனால் ஆட்களை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கனமழையும் வெள்ளமும் நிலச்சரிவும் ஒன்றாக ஏற்பட்டதன் விளைவு இது. மழையும், நிலச்சரிவும் வழக்கமாக நாம் பார்ப்பதுதானே என்று மக்கள் நினைத்தார்கள். ஆனால் ஜூலை 29 ஆம் தேதி நள்ளிரவு முதல் ஏற்பட்டது இதுவரை பார்க்காத வேகமும் காலமும் ஆகும். 48 மணிநேரத்தில் 57 செ.மீட்டர் அளவுக்கு அதி கனமழை கொட்டி இருக்கிறது. இந்தப் பகுதி செம்மண் பகுதி ஆகும். அதிகப்படியான மழை நீர் தேங்கி செம்மண் இறுக்கத்தைக் குலைத்து உடைத்துவிட்டது. இது குறித்த எச்சரிக்கை அங்கு முன்கூட்டியே தரப்படவில்லை என்று சொல்கிறார்கள்.

**இவ்வளவு பெரிய சோகப் பேரழிவு நேரத்திலும் கேரள அரசைக் குறை சொல்வதில்தான் உள்துறை அமைச்சர் அமித்ஷா குறியாக இருக்கிறார். 100 கோடி ரூபாய் பணத்தை அறிவித்து, மொத்த ஒன்றியப் படைகளையும் உள்ளே இறக்க முன்வராத அமைச்சர் அமித்ஷா, "ஏழு நாட்களுக்கு முன்பே கேரள அரசை எச்சரித்தோம" என்கிறார். "இந்திய வானிலை ஆய்வு மையம் ஆரஞ்சு எச்சரிக்கையை மட்டும்தான் விடுத்தது. ஆனால் அங்கு 500 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. நிலச்சரிவு ஏற்பட்ட பிறகுதான் சிவப்பு எச்சரிக்கை விடுத்தார்கள்" என்று சொல்லி இருக்கிறார் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன்.**

நிலச்சரிவு நடந்த 29ஆம் தேதி வெளியிடப்பட்ட அறிக்கையில், மூன்று நாட்களுக்கு ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும் என்று மட்டுமே உள்ளது. நிலச்சரிவு நடந்த இடத்தில் 'ரெட் அலர்ட்' விடுக்கப்படவில்லை.

உடனடியாக 5 கோடி ரூபாயை கேரள அரசுக்கு வழங்க உத்தரவிட்டார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். உடனடியாக பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலுவை கேரளாவுக்கு அனுப்பி பினராயி விஜயனிடம் காசோலையை வழங்கச் சொன்னார் முதலமைச்சர். 'உடுக்கை இழந்தவன் கை போல, இடுக்கண் களையும் நட்புக்கு' உதாரணமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடந்து கொண்டார்கள். ஆனால் அமித்ஷா, இந்த 'வேட்டி'யையும் கட்ட விடாமல் காலால் மிதிப்பது போன்ற காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார்.

குஜராத்தில் ஒரு பாதிப்பு என்றால் 24 மணிநேரத்துக்குள் பிரதமர் போயிருப்பார். ஆயிரம் கோடி அறிவித்திருப்பார். தமிழ்நாட்டில் நடந்த இரண்டு பேரிடர்களுக்கும் எதுவும் செய்யாத ஒன்றிய அரசு, வயநாடு மக்களையும் செயற்கைப் பேரிடரால் வறுத்தெடுக்கிறது.

**'ஒன்றியம்' இப்படித்தான் இருக்கும் என்பது நமக்குத் தெரியும்! ஆனால், மக்களோடு ஒன்றி வாழ்ந்த நீயுமா மக்களைச் சோதிக்கிறாய் நிலமே? இயற்கையே?!**




முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் "வேர்களைத் தேடி" திட்டத்தின் கீழ், தென் ஆப்ரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை. பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 1.08.2024 அன்று முதல் 15.08.2024 வரையிலான தமிழக சுற்றுப் பயணத்திற்கு துணிமணிகள், பயணக் குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை போன்ற பயணத்திற்கான பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ் மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை இணைச் செயலாளர் பா. விஷ்ணு சந்திரன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் பா. கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் தணிக்கைத்துறைகளில் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர், உதவி ஆய்வாளர் மற்றும் உதவி தணிக்கை ஆய்வாளர் பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

### "வேர்களைத் தேடி" திட்டத்தின் கீழ் 15 நாடுகளைச் சேர்ந்த

# 100 அயலகத் தமிழர்கள் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக. 2 -**

**"வேர்களைத் தேடி" திட்டத்தின் கீழ் 15 நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 1.8.2024 அன்று முதல் 15.8.2024 வரையிலான தமிழக சுற்றுப் பயணம் மேற்கொள்வதை யொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பயணத் திற்கான பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (1.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் "வேர்களைத் தேடி" திட்டத்தின் கீழ், தென் ஆப்ரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை. பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 1.08.2024 அன்று முதல் 15.08.2024 வரையிலான தமிழக சுற்றுப் பயணத்திற்கு துணிமணிகள், பயண குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை போன்ற பயணத்திற்கான பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

புலம்பெயர்ந்து வாழும் இளைஞர்களை தாய்த் தமிழ் நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பை புதுப்பிக்கும் வண்ணமும், தமிழ் கலை பண்பாடு மற்றும் கலாச்சாரத்தினை அயலகத் தமிழர்களிடையே பரிமாற்றம் செய்யும் வகையிலும், ஆண்டுதோறும் இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து பண்டைய தமிழர்களின் கட்டடம்/சிற்பக்கலை, நீர் மேலாண்மை, ஆடைகள் மற்றும் ஆபரணங்கள், கலை இலக்கிய பண்பாடு, தொல்லியல் ஆய்வுகள், அறிஞர்கள் மற்றும் சான்றோர்களுடன் கலந்துரையாடல் என்ற கலாச்சார பரிமாற்ற சுற்றுலாத் திட்டமான "வேர்களைத் தேடி" என்ற அயலகத் தமிழ் இளைஞர்களுக்கான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் 24.05.2023 அன்று சிங்கப்பூரில் நடைபெற்ற தமிழ் கலை பண்பாட்டு நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின்படி, அயலகத்தில் வாழும் 18 முதல் 30 வயதுக்கு உட்பட்ட தமிழ் இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாட்டுக்கு வரவழைத்து, தமிழ் மற்றும் தமிழர்களின் பெருமிதங்களை உணரும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கு, தமிழ்நாடு அரசு சார்பில் அழைத்துச் செல்லப்படுவர்.

அதன் அடிப்படையில், சென்ற ஆண்டு இந்த பண்பாட்டுப் பயணத்திட்டத்தில், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் மூலம் நான்கு நாடுகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களைக் கொண்ட முதற்கட்ட பயணம் மேற்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டில் இரண்டாம் கட்ட பயணமாக, தென் ஆப்ரிக்கா, உகாண்டா, குவாடலூப், மார்டினிக், பிஜி, இந்தோனேஷியா, மொரிஷியஸ், ஆஸ்திரேலியா, மாலத்தீவு, கனடா, மியான்மர், மலேசியா, இலங்கை. பிரான்சு மற்றும் ஜெர்மனி ஆகிய 15 நாடுகளைச் சேர்ந்த 100 அயலகத் தமிழ் இளைஞர்கள் 1.08.2024 அன்று முதல் 15.08.2024 வரையிலான பதினைந்து நாட்களுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர். இப்பயணத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்தார். இப்பயணத்தில் பங்குபெறும் அயலகத் தமிழ் இளைஞர்கள் தமிழ்நாட்டின் கலாச்சார தூதுவர்களாக செயல்பட்டு தமிழர்களின் கலாச்சார பெருமைகளை அவர்களது நாடுகளில் பரப்புவர்.

இந்நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ் மஸ்தான், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரிஷ் தக்கர், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை இணைச் செயலாளர் பா.விஷ்ணு சந்திரன், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் பா.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு 3வது பதக்கம்!

பாரீஸ், ஆக. 2 –

பாரிஸ் ஒலிம்பிக் ஆடவர் 50 மீட்டர் (3P) ரைபிள் பிரிவில் இந்திய வீரர் ஸ்வப்னில் குசாலே (Swapnil Kusale) வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். பாரிஸ் ஒலிம்பிக்கில் இந்தியா வென்றுள்ள மூன்றாவது வெண்கலப் பதக்கம் இது.

50 மீட்டர் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் இறுதிச் சுற்றில் ஸ்வப்னில் குசாலே வெண்கலம் வென்று அசத்தியுள்ளார். அவர் 451. 4 புள்ளிகள் பெற்று 3ஆம் இடம் பிடித்தார். சீனாவின் ஒய்.கே. லூ 463.6 புள்ளிகள் பெற்று தங்கம் வென்றார். உக்ரைன் வீரர் குலீஷ் 461 புள்ளிகள் பெற்று வெள்ளி வென்றார்.

33வது ஒலிம்பிக் திருவிழா பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் நடைபெற்று வருகிறது. 26ம் தேதி தொடங்கிய ஒலிம்பிக் திருவிழா ஆகஸ்ட் மாதம் 11ம் தேதி வரை நடைபெறும். பிரான்ஸ் முழுவதும் 30க்கும் மேற்பட்ட மையங்களில் பல்வேறு விளையாட்டுகள் நடைபெறுகின்றன.



கேரள மாநிலம், வயநாடு பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் மழைப்பொழிவு மற்றும் நிலச்சரிவு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி, தமிழ்நாடு அரசின் சார்பில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கேரள அரசிற்கு 5 கோடி ரூபாய்க்கான காசோலையினை கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களிடம் நேற்று முன்தினம் (31.07.2024) திருவனந்தபுரம், தலைமைச் செயலகத்தில், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு வழங்கினார்.